1993 ஏப்ரல் 28]

516—

அதிக விளைச்சல் போட்டியில் பரிசுபெற்ற விவசாயிகளின் வாரிசுகளுக்கு அரசு வேளாண்மைக் கல்லூரியில் இடம் அளித்தல்.

*16442—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

அதிக விளைச்சல் போட்டியில் அதிக மகசூல் பெற்று பரிசுகள் பெற்ற விவசாயிகளின் வாரிசுகளுக்கு அரசு வேளாண் மைக் கல்லூரியில் இடமளிக்க அரசு முன்னுரிமை வழங்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அதிக விளைச்சல் போட்டியில், மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மகசூல் காட்டி பரிசுகள் பெற்ற விவசாயிகளின் வாரிசுகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இளநிலை (வேளாண்மை) அறிவியல் பட்டப் படிப்பில் 1992-93 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 10 இடங்களை ஒதுக்கீடு செய்வதற்கான முன்மொழிவினை அரசு ஏற்று, அதற்கான விதி முறைகளை நிர்ணயம் செய்வதற்கான பரிந்துரைகளை அர சுக்கு அனுப்பும்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஒரு தென்னங் கன்று வளர்த்தால் மாணவர்களுக்கு அரசு வேளாண்மைக் கல்லூரியில் இடம் தருகிற ஒரு நல்ல புரட்சிகரமான திட்டத்தை தங்கத்தலைவி, புரட்சித்தலைவி அவர் களுடைய ஆட்சி அமலாக்கியுள்ள இந்த நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல செய்தியை, வேளாண்மையில் பரிசு பெற்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் இட ஒதுக் கீடு செய்து தருகிற நல்ல செய்தியை அறிவித்துள்ளமைக்கு நன்றி சொல்லி, இன்னும் இதை விரிவுபடுத்தி, வேளாண்மைத் துறை யில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மேலும் பல சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை தருகிற பயிற்சியை ஏற்று, விவசாயிகள் அதிக உற்பத்தியைப் பெறுவதற்கும், அந்த விவசாயிகளுடைய பிள்ளைகள் தங்களுடைய தந்தையார் அதிக விளைச்சல் ஈட்டித் தந்து பரிசு பெறுவார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்கு உரிய இடத்தையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு

வழங்கியிருக்கிறது. எனவே, வேளாண்மைப் பெருங்குடி மக்களின் நலத்தைக் காப்பதில் ஒப்பற்ற அரசாக நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வேளாண்மையில் முன்னேற்றம் கண்டிருக்கிற விவசாயிகளுக்கு நவீன முறையில் வேளாண்மை செய்வதற்கு அவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கவும், அரசு வழங்குகிற கடன் உதவிகளும், மானியங்களும், பல சலுகைகளும் கிடைக்க அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, இன்னும் சிறப்பான முறையில் வேளாண்மை செய்ய அரசு ஆவன செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் அதிக உற்பத்தியைப் பெற்று இந்த நாட்டுக்குத் தரவேண்டும் என்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கொண்ட இந்தத் துறையினுடைய மானியங்கள் எந்தெந்த வகையில், எந்தெந்தத் திட்டங்களில், எந்தெந்த மாவட்டங்களில் வழங்கப்படுகின்றன என்ற கையேடு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் கையேடுகளைப் பார்த்து, அந்தத் தொகுதியில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு இந்த அரசினுடைய திட்டங்களை எடுத்துச்சொல்லி, அவர்களும் உதவ வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டு கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஆ. கு. சீனிவாசன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன் அவர்களே, 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை'' என்ற வள்ளுவரின் வாக்குக்கு இணங்க தமிழகத்தில் வாழும் எல்லா விவசாயிகளும் மழையை நம்பித்தான் விவசாயம் செய்து வருகின்றனர். அதேபோல், எல்லா விளைபொருட்களும் மழை நீரை நம்பித்தான் நன்றாக விளைந்து கொண்டிருக்கின்றன. அதற்கு இணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியை நம்பித்தான் தமிழகம் இயங்கிக் கொண்டு வருகிறது. மேலும், விவசாயிகள் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த விவசாயத்தைச் செய்கிறார்களோ, அந்த நிலத்தைப் பொறுத்தும், மழையைப் பொறுத்தும், மண்ணைப் பொறுத்தும் தான் விளைபொருட்கள் விளைகின்றன. ஆகையினாலே, அந்தந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, அந்தந்தப்

1993 ஏப்ரல் 28]

பகுதியிலே விளையும் விளைபொருட்கள்களின் அதிகமான மகசூலைக் கொண்டு, அதிகமாக மகசூல் செய்யும் விவசாயிகளுக்குப் பரிசாக விவசாயிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு கல்லூரிகளில் சேர்ப்பதற்கு அரசு வாய்ப்பு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்திலே மாணவர்களைச் சேர்க்கின்றபோது, அவர்கள் நுழைவுத் தேர்வு எழுதி, அந்த நுழைவுத் தேர்விலே பெறுகின்ற மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 517, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

517—

வெளிநாடுகளுக்குப் பழங்களை ஏற்றுமதி செய்தல்.

*16758—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ?

(ஆ) எந்தெந்த நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

(இ) எந்தெந்த வகையான பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகள் பற்றிய புள்ளி விபரங்கள் சரிவரக் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் உரிய புள்ளி விபரங்கள் சேகரிக்க பல்வேறு நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விபரங்கள் சேகரிக்கப்பட்டபின் உரிய பதில் அளிக்கப்படும்.